Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

Spl.S.C.No.107/2025

Dated 03-02-2026
Deposition of witness for : PW 16
**அரசு தரப்பு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரத்தினவேல் | வயது | : | 65 |
| தந்தை பெயர் | : | ஜெயவேல் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | கூடுதல் காவல்கண்காணிப்பாளர் (ஓய்வு) |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) அச்சு முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் 13.11.2014 மாலை 5.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டது 17.11.2014 அன்று காலை 8.00 மணிக்கு என்றால் சரிதான்.

2) முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் வாதியால் தாமதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்த பிறகு வாதியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அந்த வாக்குமூலத்தில் புகார் கொடுப்பதற்கு காலதாமதம் ஏன் என்று குறிப்பிட்டு விளக்கம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் 15.11.2014 சனி, ஞாயிறு என குறிப்பிட்டு சொல்லி உள்ளார். 24 மணி நேரமும் விஜிலென்ஸ் காவல்நிலையத்தில் வேலை நடைபெறும் என்றும் சனி ஞாயிறுகளில் வேலை நடைபெறும் என்றால் சரிதான்.

3) முதல் தகவல் அறிக்கையில் வாதி மற்றும் எதிரியின் முன் நடவடிக்கை குறித்து விசாரித்தாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் ரகசியமாக விசாரணை மேற்கொண்டேன்.

4) இந்த மாதிரி வழக்குகளில் புகாரை பெற்ற பின்பு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தென் சரக அவர்களிடம் அனுமதி பெற்று பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். அம்மாதிரி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லைஎன்றால் சரிதான்.

5) முதல் தகவல்அறிக்கையில் முதல் பக்கத்தில் வழக்கு பதிவு செய்த நேரம் காலை 8.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வழக்கு பதிவு செய்யப்பட்டது காலை 10 மணிக்குதான் அந்த விபரம் முதல் பக்கத்தில் குறிப்பிடப்படவில்லை.

6) இந்தபுகார்தாரர் புகார் கொடுக்கும் காலத்திற்கு முன்பே குற்ற வழக்குகளில்

ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் மீது குத்தாலம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

7) புகார்தாரர் புகாரில் தன் ஊரில் தஞ்சாவூர் சத்திரத்திற்கு சொந்தமான இடத்தில் அவர் தாயார் பெயரில் உள்ள வீட்டில் சுமார் 12 வருடங்களாக குடியிருந்து வருவதாகவும் அந்த வீட்டில் அவர் தன் தாய் தந்தை அண்ணனுடன் வசித்து வருவதாகவும் அந்த வீட்டை கான்கிரிட் வீடாக கட்டிக்கொள்ள சத்திரம் தாசில்தாரிடம் மனு கொடுத்துள்ளதாகவும் அதற்குரிய உத்தரவு வழங்குவதற்கு லஞ்சமாக பணம் கேட்பதாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

8) புகாரிலோ அல்லது நான் விசாரித்தபோது வாதி அவருடைய சகோதரர் ஷாஜஹான், சகோதரி ஜெரினாபேகம் ஆகியோர்கள் வீட்டு மனை பகுதி கோரியோ அல்லது வீடு கட்ட அனுமதி கோரியோ சத்திரம் தாசில்தாரிடம் மனு கொடுத்திருந்ததாக கூறவில்லை என்றால் சரிதான்.

9) பொதுவாக இது மாதிரி வழக்குகளில் ஒருவர் லஞ்சம் கேட்டால் அவர் மீது புகார் கொடுக்கப்பட்டால் அதை பதிவு செய்து விசாரிக்கவேண்டுவதுதான் என் வேலை என்றால் சரிதான். ஆனால் புகார்தாரரின் கோரிக்கைகளின் படி வீடு கட்டுவதற்கோ மனை பிரிவு கேட்பதற்கு உண்டான உரிமைகளை மீட்டு தருவது எங்களது வேலை அல்ல என்றால் சரிதான்.

10) நான் விசாரணையின்போது வாதியின் தாயார் அபுரோஜாபீவி, வாதியின் சகோதரர்

ஷாஜஹான், வாதியின் சகோதரி ஜெரினாபேகம் ஆகியோர்களுக்காகவும் மனு கொடுக்கப்பட்டு அந்த மனு கோப்புகளை நான் கைப்பற்றியுள்ளேன் என்றால் சரிதான். 24.06.2014 ல் சத்திரம் தாசில்தாருக்கு தான் குடியிருக்கும் வீட்டிற்காக பாதுகாப்பு கருதி ஒரு இரும்பு கேட் போட்டுகொள்வதற்கு அனுமதி கோரியும் தான் ஒரு செண்ட் மனையில் குடும்பத்துடன் குடியிருப்பதாகவும் அபுரோஜாபீவி கூறியுள்ளார் என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும்.

11) ஷாஜஹான், ஜெரினாபேகம் ஆகியோர்கள் சத்திரம் நிர்வாகத்திற்கு கொடுத்த மனுக்கள் கைப்பற்றப்பட்டது.

12) புகார்தாரர் புகாரில் தன்னுடைய தாயார் வீட்டிற்கு அனுமதி கேட்டபோதுதான் எதிரி லஞ்சமாக பணம் கேட்டதாக வழக்கு என்றால் சரிதான். ஷாஜஹான், ஜெரினாபேகம் ஆகியோர்களுக்கு மனை அனுமதி கேட்டதற்காக எதிரி லஞ்சம் கேட்டதாக வழக்கு இல்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி ஷாஜஹான், ஜெரினாபேகம் ஆகியோர்கள் கோரிக்கை சம்பந்தப்பட்ட மனுக்கள் அதில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் புகார்தாரர் வழக்கிற்கும் மேற்படி இருவரின் கோப்புக்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். வழக்கிற்கு சம்பந்தம் இருப்பதாக தெரிய வந்தது அதனால் கைப்பற்றினேன்.

13) என்னிடம் கொடுத்த புகாரிலும் மற்றும் என்னிடம் அ.சா.2 கொடுத்த வாக்குமூலத்திலும் ரூ.20 ஆயிரம் பணம் ஏற்பாடு செய்து கொண்டு வந்துள்ளதாக கூறியுள்ளார் என்றால்

சரிதான். ஆனால் அந்த ரூ.20 ஆயிரம் அவருக்கு எப்படி கிடைத்தது என்ற விபரத்தை அவருடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரிலோ அல்லது என் விசாரணையிலோ வாதி அந்த பணம் ரூ.20 ஆயிரத்தை தன் சகோதரி ஜெரினாபேகத்திடம் இருந்து பெற்று வந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

14) ஒரு நபர் என்னிடம் ஆஜராகி லஞ்சம் கேட்டது சம்பந்தமாக வாய்மொழியாக புகார் சொன்னால் அந்த புகாரை பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டியது என் கடமையாகும். இந்த வழக்கில் 17.11.2014 க்கு முன்பு வாதி என்னை காவல்நிலையத்திற்கு வந்து இந்த வழக்கு சம்பந்தமாக சந்தித்தாரா என்றால் இல்லை. அவ்வாறு உண்மையிலேயே 2 நாட்களுக்கு முன்பு வாதி வந்து என்னை சந்தித்து எதிரி மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் அதற்கு என்ன செய்யவேண்டும், எப்படி புகார் கொடுக்கவேண்டும் என்று ஆலோசனை கேட்டு நான் அறிவுரை சொல்லி அனுப்பினேன் என்றால் சரியல்ல.

15) அ.தி.மு.க பிரமுகர் ஓ.எஸ். மணியன் எம்.பி அவர்களை தெரியும். கேள்விப்பட்டிருக்கிறேன். அவரிடம்தான் இந்த வழக்கின் வாதி கார் ஓட்டுனராக வேலை பார்த்து வந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. புகார் கொடுப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே மேற்படி ஓ.எஸ். மணியன் என்னை தொடர்பு கொண்டு வாதிக்கு அனைத்து உதவிகளையும் செய்யுங்கள் என்று கூறினார் என்று சொன்னால் சரியல்ல.

16) அதன்பிறகுதான் வாதி என்னிடம் யோசனை கேட்டும் மற்றும் வேண்டியவர்களை

கலந்து ஆலோசனை செய்தும் காலதாமதமாக ஒருபொய்யான புகாரினை தயார் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

17) புகாரில் பெறுதல் லஞ்ச ஒழிப்புஅதிகாரி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது, குறிப்பாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

18) பொதுவாக இதுபோன்ற மனுக்கள் வரும்போது எங்கள் அலுவலகத்தில் உள்ள காவல் ஆய்வாளர்கள்தான் மனுக்கள் பெற்று வழக்கு பதிவு செய்வார்கள் என்றால் சரியல்ல. 17.11.2014 அன்று எங்கள் அலுவலகத்தில் பணியில் ஆய்வாளர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

19) பொய் புகார் கொடுப்பதற்கு சத்திரம் நிர்வாகத்தில் உள்ள மற்ற ஊழியர்களும் வாதிக்கு உறுதுணையாக இருந்துள்ளார்கள் என்று சொல்லப்படுகிறது என்றால் சரியல்ல.

20) புகார்தார் அபுதாகீர் கோரிக்கை சம்பந்தமாக தனியாக ஒரு கோப்பு உள்ளது. புகாரிலோயோ என் விசாரணையிலேயோ 11.8.2014 மனு கொடுத்த பிறகு எதிரியை அவர் 13.08.2014 மற்றும் 13.10.2014 ஆகிய தேதிகளில் எதிரியை போய் சந்தித்தாக கூறவில்லை என்றால் சரிதான்.

21) கைப்பற்றுதல் மகஜர் பக்கம் 2 ல் " மீட்டிங் முடிந்து அலுவலர்கள் வெளியே வந்தவுடன் தானும் அரசு சாட்சியும் 14.25 மணிக்கு எதிரியின் அறைக்குள் சென்று அவரை பார்த்து வீடு கட்ட அனுமதி சம்பந்தமாக கேட்டதாக" குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கைப்பற்றுதல் மகஜர் கம்பூயூட்டர் பிரிண்டிங் வடிவத்தில் உள்ளது என்றால் சரிதான்.

கைப்பற்றுதல் மகஜரில் முதல் பக்கத்தில் 14.40 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 16.30 மணிக்கு முடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கைப்பற்றுதல் மகஜர் காவலர் ஒருவரால் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த கைப்பற்றுதல் மகஜரில் "14.40" என்பது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜர் சோதனை முடிந்த பிறகு நான் சொல்லி காவலரால் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். 17.11.2014 ம் தேதி காலை 11.30 மணியில் இருந்து நடந்த அனைத்து நிகழ்வுகளும் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் படிசாட்சி தாமோதரன் மற்றும் கணேசன் ஆகியோர்கள் ஆவணங்களை எடுத்து ஆஜர் படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த இருவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக இல்லை என்றால் சரிதான்.

22) எதிரியை அலுவலகத்தில் போய் சந்தித்தபோது வாதியிடம் அரசு சாட்சி பற்றி எதிரி எதுவும் கேள்வி கேட்டதாக இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் தாமோதரன் மற்றும் கணேசன் ஆகியோர்கள் எடுத்து கொடுத்த ஆவணங்கள்குறிப்பாக எந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்ற விபரம் கைப்பற்றுதல் மகஜரில் இல்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி தாமோதரன் மற்றும் கணேசன் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தபோது எங்கு இருந்து வந்தார்கள், நான் அழைத்ததன் பேரில் வந்தார்களா என்ற விபரம் எதுவும் எழுதப்படவில்லை என்று சொன்னால் அவர்கள் அலுவலகத்தில் இருந்தார்கள்.

23) சாட்சி ஞானசேகரனிடம் நான் வாதி சம்பந்தப்பட்ட ஃபைலை காண்பித்து அதில்

கையெழுத்து போட்டது நீங்கள்தானா என கேட்டேனா என்றால் அவ்வாறு இல்லை. பினாப்தலின் பரிசோதனை தொடங்குவதற்கு முன்பே நான் எதிரியிடம் டிராயரில் உள்ள பணத்தை எடுங்கள் என்று கூறி அதன் பேரில் அவர் பணத்தை எடுத்து கொடுத்து அதை எங்கள் பார்ட்டியில் உள்ள விஜிலென்ஸ் காவலர் ஒருவர் எண்ணி பார்த்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மேஜைக்கு இடது பக்கம் ஒன்று வலது பக்கம் ஒன்று என இரண்ட டிராயர்கள் இருந்தன. வலது பக்கம் மேல் பக்கம் உள்ள டிராயருக்கு அடியில் மற்றொரு டிராயரும் உள்ளதா என்றால் இல்லை. வலது பக்கத்தில் உள்ள இரண்டாவது டிராயரில் இருந்து பணம் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. பணம் வைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் பையின்மேல் இருந்த பணம் கைப்பற்றப்பட்டதாக மகஜரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பணம் பைக்குள்ளே இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அந்த பையின்மேலே ஒரு சாவிகொத்து இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. பரிசோதனைக்கு பயன்படுத்தப்பட்ட சில்வர் தட்டை கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

24) பாட்டில்களில் எழுதி ஒட்டப்பட்ட சிலிப்புகள் த.கா. 2180 ராஜமாணிக்கம் என்பவரால் எழுதப்பட்டது. அவர்தான் சீல் வைத்தார். கரைசல் தயார் செய்தது அவர் அல்ல. 769 கந்தப்பன் த.கா. அவர்களால் தயார் செய்யப்பட்டது. எதிரியின் அலுவலகத்தில் இருந்து சுமார் 200 அடி தூரத்தில் நாங்கள் வந்த வாகனத்தை நிறுத்தி சாட்சிகளை அலுவலகத்திற்குள்ளே அனுப்பப்பட்டனர் என்றால் சரிதான். வாதி சைகை கொடுத்ததை நான் பார்த்தேன்.

எதிரியின் அலுவலகத்தில் இருந்து வெளியே மெயின்ரோட்டில் நின்று சைகை கொடுத்தார். அப்போது நாங்கள் 100 அடி தூரத்தில் நின்றுகொண்டிருந்தோம்.

25) வரைபடத்தில் பணம் வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படும் இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரியின் இருப்பிடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரண்டை தவிர வேறு முக்கியமான இடங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் நின்றுகொண்டிருந்த இடம், சைகை கொடுத்த இடம் அப்போது நாங்கள் நின்று கொண்டிருந்த இடம் ஆகியவை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வரைபடம் த.கா. 1454 சாமிநாதன் என்பவரால் வரையப்பட்டது மற்றும் எழுதப்பட்டது என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு அளவுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

26) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு அ.சா.2 டன் அ.சா.4 எதிரியின் அறைக்கு செல்லவில்லைஎன்றாலும் அ.சா.4 சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் சரியல்ல. நான் சைகைக்கு பிறகு வாதியை சந்தித்து விபரம் கேட்டதாகவும், அவர் விபரங்கள் சொன்னதாகவும் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. நான் நடவடிக்கையின்போது எதிரியை பணம் பற்றி விசாரிதத்ததாகவோ அவர் தான் லஞ்சமாக பணம் பெற்றதாக சொன்னார் என்றும் அதனை தொடர்ந்து எழுதப்பட்டுள்ள இதர விபரங்களும் பொய்யாக ஜோடிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வாதி மட்டும் சென்று எதிரியை சந்தித்ததாகவும்

அப்போது எதிரி தற்போது ஏன் வந்திர்கள் உங்களுடைய இடத்தை இன்னும் பார்வையிடவே இல்லை நீங்கள் போய்விட்டு பிறகு வாருங்கள் என்று சொன்னதாகவும் உடன் எதிரி அவர் அறையிலேயே அறையுடன் இணைந்த கழிப்பறைக்கு போய்விட்டதாகவும் அந்த சந்தர்ப்பத்தில் வாதி டிராயரில் பணத்தை வைத்துவிட்டு வெளியே வந்ததாகவும் இந்த விபரத்தைதான் வாதி என்னிடம் கூறினார் என்று சொன்னால் சரியல்ல.

27) எதிரி எந்த காலத்திலும் வாதியிடம் லஞ்சமாக பணம் எதுவும் கேட்கவும் இல்லை வாங்கவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எதிரியின் அறைக்குள்ளே சென்றபோது வாதியின் சொல்படி அதட்டி டிராயரில் உள்ள பணத்தை எடுக்குமாறு கூறினேன் என்றும் அதன்பிறகுதான் வேறுவழியின்றி எதிரி பணத்தை எடுத்து கொடுத்தார் என்றும், பிற்பாடுதான் சோதனை செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

28) கைப்பற்றுதல் மகஜர் நான் சொன்ன நேரத்தில் இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு பின்னிட்டு சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அரசுசாட்சிகளுக்காக வேண்டு கோள் கடிதம் அ.சா.ஆ.27 மற்றும் அ.சா.ஆ.28 நான் தற்போதுதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அது உண்மையிலேயே வழக்கு பதிவு செய்யப்பட்ட காலத்தில் பெறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

29) செயல்முறை ஆணைகள் முழுதுமாக பூர்த்தி செய்யப்படாமல் எதிரியின் கையொப்பம் இல்லாமல் இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

30) என்னுடைய வழக்கு படி வாதி எதிரியை சந்தித்து பணம் கொடுத்த பிறகு வாதியிடம் எதிரி உங்களுடைய உத்தரவு தயாராக இருக்கிறது உதவியாளர் வந்தவுடன் கையெழுத்து போட்டு கொடுத்துவிடுகிறேன் வெளியே காத்திருங்கள் என்று கூறியதாக உள்ளது என்றால் சரிதான்.

31) செயல்முறைகளில் எதிரியிடம் கையொப்பம் பெற்று வாதியிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை.

32) கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை ஒரே லேப்டாப்பில்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். உண்மை நிகழ்வுகளை மறைத்து பின்னிட்டு ஆவணங்கள் ஜோடிக்கப்பட்டு எதிரி மீது ஒரு பொய்யான வழக்கு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

33) எனக்கு பின்னால் சாட்சிகளுக்கு அவர்கள் கோரியப்படி உடனடியாக உத்தரவு வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/ P. வேல் முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்